1973 பிப்ரவரி 5]

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அந்த ஒரு கோடி ரூபாயும் செலவழிக்கப்பட்டு விட்டதா, அல்லது இன்னும் எந்தெந்த மாவட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட விருக்கிறது என்று சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நாம் ஒதுக்கிய ஒரு கோடி ரூபாயும் செலவழிக்கப்பட்டு விட்டது. மத்திய அரசாங்கம் ரூ. 1½ கோடி வரையில் செலவழிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். மொத்தமாக இன்னும் கணக்கு பூர்த்தியாகவில்லை என்று கருதுகிறேன். மேற்கொண்டு தகவல் என்னிடத்தில் இல்லை.

கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள்

*11 வினா திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள் தற்போது எத்தனை பேர் உள்ளனர் ?

(இ) அவர்களுக்குச் சட்டப் பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(இ) கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளுக்குச் சட்டப் பயிற்சி அளிப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இந்த கௌரவ நீதிபதிகளும் நீதி வழங்குவதில் முக்கிய பங்கு வகிப்பதால் அவர்களுக்குச் சட்டப் பயிற்சி அளித்தால் நல்லது என்பதை அரசு கருதி நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

@ 203–206 ஆம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.)

[1973 பிப்ரவரி 5

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, சட்டப் பயிற்சி உள்ளவர்கள் நீதி மன்றங்களில் பணிபுரிகிறார்கள். இப்படி மக்கள் பிரதிநிதிகள்தான் பல இடங்களில் நியமிக்கப்படுகிறார்கள். நீதி மன்றங்களில் வழக்குகள் குறைக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் வைக்கப்பட்டிருக்கிறது. இது எல்லா கிராமங்களிலும் இருக்கிறது. ஆண்டுதோறும், அல்லது 3 ஆண்டுக்கொரு முறை இவர்கள் பதவிக் காலம் மாற்றப்படுவதால், அவர்களுக்கு நிரந்தரமாகச் சட்டப் பயிற்சி அளிப்பது என்பது முடியாத காரியம்.

THIRU R. PONNAPPA NADAR: There is an Honorary First Class Magistrate's Court at Kuzhithurai and the local Bar Association in Kuzhithurai has passed a resolution recently urging the abolition of that court and instead of that they had requested for a second class Stipendiary Magistrate's Court there. May I know whether any action has been taken on the resolution passed by the Bar Association of Kuzhithurai? If any action had been taken, it may be let known to the House.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போது என்னிடத்தில் தகவல் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதைப் பரிசீலிக்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இங்கு வைத்திருக்கின்ற அறிக்கையின் பிரகாரம் ஜுவினைல் கோர்ட்டுக்கு ஒரு மாஜிஸ்டிரேட் போட்டிருக்கிறார்கள். இதற்கு முன்பாக இருந்தவர்கள் எத்தனை பேர்கள், எவ்வளவு மாஜிஸ்டிரேட் போடப்பட்டிருக்கிறார்கள், எந்த அடிப்படையில் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஜுவினைல் கோர்ட்டு ஆங்காங்கு நிறுவப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் எத்தனை பேர்கள் தேவைப்படுகிறார்கள் என்று ஸிடி பிரசிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் சிபார்சு செய்கிறார்களோ, அதை நாம் அனுமதிக்கிறோம். இந்தப் புள்ளி விவரங்களைப் பொறுத்த அளவுக்கு எத்தனை பேர்கள் கேட்டார்கள், எத்தனை பேர்கள் போடப்பட்டது என்ற விவரம் தற்பொழுது என்னிடம் இல்லை.